30.03.2023
O.S.No. 176/2020

வா. சா. 1 தங்கராஜ் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி எனது மனைவி. நான் என் மனைவியின் தாய் மாமா என்றால் சரிதான். என் மனைவியுடன் பிறந்த சகோதரிகள் என் ஒன்றுவிட்ட சகோதரர்களை திருமணம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் மனைவியின் சகோதரிகள் தாய்மாமா முறையில்தான் திருமணம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி குமார் சொந்தத்தில் திருமணம் முடிக்கவில்லை. அன்னியத்தில் முடித்துள்ளார். என்னுடைய மைத்துனர் நல்லழகர் உடன் பிறந்தவர்கள் செல்லம், சின்னையா, அழகி என்ற அழகம்மாள் என்று பிராதில் சொல்லி உள்ளோம் என்றால் சரிதான். வாதாசாஆ 2 ன்படி செல்லம் என்பவர் பெயர் காணப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு 1987 ல் திருமணமானது. என்னுடைய மைத்துனர் நல்லழகன் குடும்பத்தில் வெண்ணிலையாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவி இந்த வழக்கில் சாட்சியம் சொல்வதற்கு தயாராக இல்லை என்றும் என் தகப்பனார் காலத்திலேயே பணம் பெற்றுக்கொண்டதாக கூறியதாகவும் சாட்சியம் அளிக்க விரும்பவில்லை என்றும், அதனால்தான் நான் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், படிப்பறிவு இல்லாத காரணத்தினாலும் நான் சாட்சியம் அளிக்கிறேன். அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கு மருத்துவ ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் உயில் எதுவும் எழுதி வைக்காமல் தவறிவிட்டார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவர் 2005 ல் ஒரு உயில் எழுதி அதை ரத்து செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய திருமணத்திற்கு

சுமார் ரூ.35 ஆயிரத்திற்கும் மேல் மதிப்புள்ள சீர்வரிசைகளை 1ம் பிரதிவாதியும் அவரது தகப்பனாரும் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. 10.7.2006ல் என்னுடைய மனைவிக்கும் அவருடைய சகோதரிகளுக்கும் தலா ரூ.10 லட்சத்தை அவருடைய தகப்பனார் கொடுத்ததால் சொத்தில் பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள் என்றால் சரியல்ல. ரூ.10 லட்சத்தை வாங்கிக்கொண்ட காரணத்தினால்தான் மற்ற சகோதரிகள் இந்த வழக்கை நடந்த எதிர்உரை தாக்கல் செய்ய முன்வரவில்லை என்றும் என் மனைவி சாட்சி சொல்ல முன்வரவில்லை என்றால் சரியல்ல. 10.7.2006ம் தேதி ஒவ்வொரு பவுன் பெண் வாரிசுக்கும் 30 பவுன் நகையும் என் மாமனார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அப்படி கொடுத்தால்தான் 2005ல் எழுதிய உயிலை 10.7.2006ல் ரத்து செய்தார் என்றால் அது பற்றி தகவல் பெண் வாரிசுகளுக்கு தெரியாது. என்னுடைய மனைவிக்கு வாங்கிய சீர் வரிசை பாத்திரங்களுக்கு மொத்த பில்களும் 1ம் பிரதிவாதி அவரது கைவசம் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய திருமணம் 23.11.1980 ல் நடந்தது என்றும் வழக்கிற்காக 1987 என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் ஞாபகமில்லை. அவருக்கு கிராம தாலியாக போட்டு அழைத்து வந்து திருமணம் செய்ததால் அந்த வருடம் எனக்கு ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதிக்கு அன்னியத்தில் 1990ம் வருடம் திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு நான் தாய் மாமா என்ற முறையில் சீர் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு திருமணமான காலத்தில் இருந்தே எனக்கும் அவருக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். பிராதில் என்ன விவரம் கூறப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் கொஞ்சம் தெரியும். கொஞ்சம் தெரியாது. என் மனைவியின் சகோதரிகளுடன் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் பின்பும் பேச்சுவார்த்தை

உள்ளது. உண்மையாகவே மற்ற சகோதரிகளுடன் பேச்சு வார்த்தை இருந்திருந்தால் அவர்கள் என் மனைவியுடன் வாதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மற்ற சகோதரிகளுக்கு வழக்கு தாக்கல் செய்ய விருப்பம் இல்லை என்றால் அவர்களைத்தான் கேட்கவேண்டும். 1994 ம் வருடம் 3 ம் பிரதிவாதிக்கு திருமணம் நடந்தது. பிராதில் 1 ம் பிரதிவாதி அவருடைய சகோதரிகளுக்கான திருமணம் செய்யும்போதே அவர்களுக்கு சீர்வரிசை செய்யக்கூடாது என்று அவரது தகப்பனாரை மிரட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் 1 ம் பிரதிவாதிக்கும் அவரது தகப்பனாருக்கும் பேச்சு வார்த்தை சுமூகமாக இல்லை என்றால் சரியல்ல. ஒன்றாகத்தான் இருந்தோம். வழக்கு பூர்வீகச்சொத்தை பிரிக்கவேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கா அல்லது சுயசம்பாத்திய சொத்தை பிரிக்க தாக்கல் செய்யப்பட்ட வழக்கா என்றால் இரண்டும்தான். பிராதில் 3 வது இலக்கச்சொத்தாக சொல்லப்பட்டுள்ள சொத்து என்ன சொத்து என்றால் ச.எண்.100/5, 85 ஆகும். 3 வது லக்கச்சொத்தில் 2,3,4 இலக்கச் சொத்துக்கள் 1 ம் பிரதிவாதியின் பெயரில்தான் இருக்கிறது என்றால் சரிதான். என் மாமானார் அவரது பெயரில் கிரையம் வாங்கி கொடுத்தார். எந்த வருடம் கிரையம் பெறப்பட்டது என்ற வருடம் எனக்கு ஞாபகமில்லை. அந்த சொத்திற்கான பட்டா, கிஸ்து ரசீது ஆகியவை 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். சொத்தின் உரிமையாளர் மற்றும் அனுபவத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களது பெயரில்தான் பட்டா, கிஸ்து ஏற்படும் என்றும் இந்த சொத்து 1 ம் பிரதிவாதியின் பெயரில் இருப்பதால்தான் அவரது பெயரில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மாமனார்தான் வாங்கி கொடுத்தார். உண்மையாகவே இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் 2,3,4 அயிட்டச் சொத்துக்களின் சர்வே எண்கள் எனக்கு தெரிந்திருக்கும் என்றும் வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதசாஆ.10 ல் என்ன சொல்லப்பட்டு உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதசாஆ.10 ஆவணம் குல்கர்ணியிடம் 1 ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாகத்தான் கண்டுள்ளது என்றும் நான் மாமனார் பெயரில் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதசாஆ.10 ஆவணத்தின்படிதான் மேற்கண்ட 3 அயிட்டச் சொத்துக்களும் வருகிறது என்றால் வரலாம். என்னுடைய மாமனாருக்கு எந்த சொத்து அவருடைய குடும்பத்தில் இருந்து பாகமாக கிடைத்தது என்று அறுதியிட்டு கூற இயலாது என்றால் பட்டா எண்.612 ல் 9 இலக்கச் சொத்து காணப்பட்டது. அந்த சொத்துக்கள் எல்லாம் என்னுடைய மாமனாரும் என் சகோதரியும் கணவன் மனைவியாக இருந்து இருவரும் சேர்ந்து உழைத்து வீட்டின் மூத்த குடும்ப ஆண் உறுப்பினர் என்பதால் என் மாமனார் பேரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி கமிசன் மண்டி வைத்தும் ரியல் எஸ்டேட் செய்தும் தனித்த வருமானத்தில் வசதி வாய்ப்புடன் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. பிராதில் திருமணத்தின்போதே சீர் செய்யக்கூடாது என்றும் 1 ம் பிரதிவாதி ஆவணங்களை எடுத்துச்சென்றுவிட்டார் என்று சொல்லும் சூழ்நிலையில் அதன் பிற்பாடு 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் 1 ம் பிரதிவாதியின் பெயரில் சொத்துக்கள் வாங்கினார் என்று சொல்வது சாத்தியமில்லாதது என்று சொன்னால் சரியல்ல. இருவரும் ஒன்றாகத்தான் இருந்தார்கள். 1 ம் பிரதிவாதி அன்னியத்தில் திருமணம் முடித்த காரணத்தினால்தான் அந்த கால கட்டத்தில் எனக்கும் வாதியின் தகப்பனாருக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் எதிராக மனக்கசப்பு இருந்தது என்றும் அதனால்தான் நான் தாய்மாமன் சீர் செய்யவில்லை என்றால் சரியல்ல. 4 பெண் வாரிசுகளுக்கு மட்டும்தான் நான் தாய்மாமன் சீர் செய்தேன். என்னுடைய மாமனார் பேரில் இருந்த சொத்து ஆவணங்களை 1 ம் பிரதிவாதி எடுத்துச் சென்றுவிட்டார் என்ற நிலையில் காவல் நிலையத்தில் என் மாமனாரோ, மற்ற பெண் வாரிசுகளோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்தார்கள்.

ஆனால் நடவடிக்கை இல்லை. அந்த புகாரையோ புகார் ஏற்பு ரசீதையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 25.08.2020 ம் தேதி வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். பிராதின் 15 வது இலக்கச்சொத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 5 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 13.8.2020 ம் தேதியே 15 வது இலக்கச்சொத்தை 5 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து அவரும் சுவாதீனம் பெற்று அந்த சொத்தின் தனி உரிமையாளராக இருக்கிறார் என்றால் சரியல்ல. அந்த சொத்தின் ஆவணமாக பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் இன்றைக்கும் 15 இலக்கச்சொத்து கூட்டுக்குடும்ப சொத்தாக இருந்திருந்தால் அதனுடைய ஆவணங்கள் என் மாமனார் வசம் இருந்திருக்கும் என்றும் அது 5 ம் பிரதிவாதியின் தனித்த சொத்தாக அதனை 1 ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்ததால் தான் 1 ம் பிரதிவாதியின் வசம் உள்ளது என்றால் தானம் எழுதி வாங்கியதாக சொல்லவில்லை. அப்படி எழுதியிருந்தாலும் அது செல்லாது. வாதசாஆ.27 மற்றும் 28 அறிவிப்பு அனுப்பிய காலகட்டத்தில் இந்த சொத்து சம்மந்தமாக இந்த பரிவர்த்தனை நடக்கவில்லை என்றும் அதனால் தான் அந்த விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் உண்மையாகவே அசல் ஆவணங்களை 1 ம் பிரதிவாதி எடுத்துச் சென்றிருந்தால் வாதசாஆ.23 அவருடைய வசம்தான் இருந்திருக்கவேண்டும் என்றும் ஆனால் என்னுடைய வசம் இருப்பதால் அனைத்து ஆவணங்களும் என்னிடம்தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பாகவே இந்த ஆவணம் கிடைக்கப்பெற்றது. வாதியின் தகப்பனார் நல்ல திடகாத்திரமாக இருக்கும் காலகட்டத்தில் அவர் பெயரில் சொத்துக்களை கிரையம் பெற்றிருக்கிறார் என்றும் அவருடைய சொத்துக்களை கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். இரண்டு

சொத்துக்களை விற்றுள்ளார். ஒரு சொத்தை 1 ம் பிரதிவாதிக்கு கிரையம் வாங்கி கொடுத்துள்ளார். அவை நடந்தது 2001 ம் ஆண்டு. உண்மையில் 2001 ல் 1 ம் பிரதிவாதி பெயரில் சொத்தை கிரையம் பெற்றுக்கொடுத்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையாகவே 2001 ம் ஆண்டு 1 ம் பிரதிவாதி எந்த சொத்தும் கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. 2001 ம் ஆண்டுதான் வாங்கிக் கொடுத்தார். பிரதிவாதிகள் 6 முதல் 10 வரையானவர்கள் தாவாச் சொத்தில் வாடகைதாரர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கொடுத்துள்ளேன். 10 முதல் 14 லக்கச்சொத்துக்கள் 1 ம் பிரதிவாதியின் தனித்த சொத்துக்கள் என்றும் அவருடைய சுயசம்பாத்தியத்தின் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் 1 ம் பிரதிவாதி அவரது தனித்த சொத்துக்கள் என்ற அடிப்படையில் 6 முதல் 10 பிரதிவாதிகள் வாடகைதாரர்களாக ஒப்பந்தம் ஏற்பட்டு குடியிருந்து வருகிறார்கள் என்றால் வாடகை பணத்தை பெற்று என் மாமனாரிடம்தான் கொடுத்தார். உண்மையில் கூட்டுக்குடும்பச்சொத்தாக இருந்திருந்தால் இந்து கூட்டுக் குடும்ப சொத்து என்று கர்த்தா என்ற அடிப்படையில் என் மாமனார் பெயரில்தான் ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்றால் அதுபற்றி என் மாமனார் எந்த ஒரு தகவலும் நான்கு பெண்வாரிசுகளுக்கும் சொல்லவில்லை. நில ஆர்ஜிதம் செய்த வாதசாஆ.24,25 ஆவணங்களின் அசல் என்னிடம் இல்லை என்றும் ஜெராக்ஸ்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னிடம் கொடுத்ததை நான் தாக்கல் செய்துள்ளேன். இந்த ஆவணங்கள் எப்படி கிடைத்தது என்றால் தாசில்தார் அலுவலகத்தில் கேட்டுப் பெற்றேன். தாசில்தார் அலுவலகத்தில் எந்த ஒரு ஆவனத்தையும் சான்று அளித்துதான் கொடுப்பார்கள் என்றும் இதுபோல் ஜெராக்ஸ் கொடுக்க மாட்டார்கள் என்றால் உரிமை உள்ளவர்கள் என்ற வகையில் கேட்டதால் அவ்வாறு என்னிடம் கொடுத்தார்கள். வாதசாஆ.24,25 ன்படி

1ம் பிரதிவாதிக்கு இழப்பீட்டுத் தொகை கொடுத்தபோது 4 பெண் வாரிசுகளும் ஆட்சேபனை தெரிவித்தார்களா என்றால் நான் மட்டும் தெரிவித்தேன். நான் ஆட்சேபனை தெரிவித்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையாகவே ஆட்சேபனை நான் தெரிவித்திருந்தேன் என்றால் உத்தரவுகளில் ஆட்சேபனை செய்ததற்கான வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும் ஆட்சேபனை செய்யவில்லை என்பதால்தான் மேற்கண்ட வாசகங்கள் குறிப்பிடப் படவில்லை என்றால் அப்போதே என் மாமனார் மற்றும் மைத்துனரும் உயிருடன் இருந்ததால் நான் ஆட்சேபனை செய்யவில்லை. வாதசாஆ.24 மற்றும் 25ன்படி நிலஉரிமையாளர் 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே தொகை சேரவேண்டியது என்று உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர்கள் இருவரும் ஒன்றாகத்தான் அப்போது இருந்தார்கள். உண்மையாகவே இந்த சொத்து கூட்டுக்குடும்ப சொத்தாக இருந்திருந்தால் என் மாமனார் ஆட்சேபனை செய்திருப்பார் என்றும் அவ்வாறு இல்லை என்பதால்தான் 1ம் பிரதிவாதி சொத்து என்பதை என் மாமனார் ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்கள் பெண் மக்கள் 3 பேர்கள் ஆண்மக்கள் நான்குபேர்கள். பிராதில் 10வது இலக்க சொத்தை வாதியின் தந்தை 22.11.2006ல் வாதசாஆ.17 மூலம் கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் இந்த சொத்து 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. என் மாமனார் சொத்தை எந்த எந்த வருடம் யார் யாருக்கு கிரையம் செய்தார் என்று தெரியுமா என்றால் 90 செண்டை 2001 லும், 18.1/2 செண்டையும் கிரையம் செய்தும் அவருடைய வருமானத்தையும் சேர்த்து 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து கிரையம் பெறப்பட்டது. என் மாமனார் கிரையம் செய்தார் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும் பிராதில் எந்த விவரமும் கூறவில்லை என்றால் சரியல்ல. அந்த கால கட்டத்தில் என் மாமனார் நல்ல திடகாத்திரமான உடல்நிலையுடன்

இருந்தார். நல்ல நிலையில் இருக்கும் சமயத்தில் 1ம் பிரதிவாதி பேரில் சொத்து வாங்கவேண்டிய அவசியமில்லை என்றால் 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து கொஞ்சம் வாங்கவேண்டும் என்று அவர் பேரில் சொத்தை வாங்கினார். என் மாமனாருடைய சுய சம்பாத்திய சொத்தில் எவ்வளவு வருமானம் வந்தது என்று அறுதியிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் உண்மைதான். பூராவும் மாந்தோப்புதான். என்னுடைய மாமனார் அவருடைய சம்பாத்தியத்தில் வந்த வருமானத்தை அவர் பெயரில்தான் சொத்து வாங்கினார் என்றும் 1ம் பிரதிவாதி பெயரில் எந்த காலகட்டத்தில் சொத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்துக்கள் அவரது திருமணத்திற்கு பின்னர் வாங்கிய சுய சம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என் மாமனாருடன் விருப்பத்திற்கு மாறாகவும் குடும்பத்தின் விருப்பத்திற்கு மாறாகவும் திருமணம் செய்ததால் அவர் மீது உள்ள மனக்கசப்பால் 1ம் பிரதிவாதி அவருடைய குடும்பத்தை அவருடைய வருமானத்தைக் கொண்டு தனித்து பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. பிராதில் எவ்வளவு வருமானம் என் மாமனாருக்கு வந்தது என்றும் எவ்வளவு வருமானத்தை கொடுத்தார் என்றவிவரம் வாதசாஆ.19 ல் காணப்படவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.19ல் எவ்வளவு கிரைய தொகை கண்டுள்ளது என்று தற்போதும் தெரியாது என்றால் சரிதான். 2007 கால கட்டத்தில் என்னுடைய மாமனாருகான வருமானம் எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவர்களுடைய வருமானம் அவர்களுக்குத்தான் தெரியும். எனக்குத் தெரியாது. வாதசாஆ.20 ல் கண்ட 13வது லக்கச்சொத்திற்கு எவ்வளவு தொகை கொடுத்து கிரையம் முடிக்கப்பட்டது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தற்போதும் அதில் எவ்வளவு தொகை கண்டுள்ளது என்று தெரியாது என்றால் ஞாபகமில்லை. 10 முதல் 15 லக்கச் சொத்திலும், 3வது லக்கச்சொத்தில் 2,3,4 அயிட்டச்சொத்திலும் யார் யார் வாடகைக்கு இருக்கிறார்கள்,

எவ்வளவு வாடகை வருகிறது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் மாமனாருக்குத்தான் தெரியும். தற்போதுவரை வாடகை வருமானத்தை 1 ம் பிரதிவாதிதான் பெற்று வருகிறார் என்றால் என் மாமனார் இறந்த பின்னர்தான் வாங்கி வருகிறார். வாடகை வருமானங்களுக்கான கணக்கு வழக்குகள் எதுவும் என் மாமனார் இறப்பதற்கு முன்பும், தற்போதும் தெரியாது என்றால் எனது மாமனார் உயிருடன் இருக்கும்போது சொல்வார். தற்போது சொல்வதற்கு யாரும் இல்லை. வாடகை வருமானம் சம்மந்தமாக எந்த ஒரு பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. 10.7.2006 ம் தேதி வாதிக்கும் மற்ற பெண் வாரிசுகளுக்கும் தலா ரூ.10 லட்சம் கொடுக்கும்போது கிராம நாட்டாண்மை பொன்னுக்காளை மற்றும் சாட்சிகள் தேத்தாம்பட்டி பாகன் அம்பலம் மகன் பச்சையம்பலம் முன்னிலையில் கோவில் வீட்டில் வைத்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் இருவரும் இறந்து விட்டார்கள். அவர்கள் 10 வருடங்களுக்கு முன்பாகவே இறந்து விட்டார்கள். பணம் எதுவும் எங்களுக்கு கொடுக்கவில்லை. 3 வது இலக்கச் சொத்தில் 2,3,4 அயிட்டச் சொத்திலும், 10 முதல் 15 லக்கச்சொத்தில் இன்றுவரை 1 ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றும், வாதியோ 2,3,4 பிரதிவாதிகளோ எந்த ஒரு காலகட்டத்திலும் பாகதாரர்கள் என்ற அடிப்படையிலும் எந்த ஒரு அடிப்படையிலும் பாகதாரர்கள் என்ற அடிப்படையில் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரிதான். என் மாமனார் இருக்கும் வரை போய் வந்து கொண்டிருந்தோம். தாவாச் சொத்தின் அனுபவத்தில் நாங்கள் எந்த ஒரு அனுபவத்திலும் இல்லாத நிலையில் தாவாச்சொத்தின் முழு மதிப்பிற்கு நீதிமன்றக் கட்டணம் செலுத்தியிருக்கவேண்டும் என்றும் அவ்வாறு செலுத்தாததால் தாவா தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

மேற்கொண்டு குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

S SIVAKADATCHAM

Digitally signed by S SIVAKADATCHAM
Date: 2023.03.30 18:09:24 +0530

Principal District Judge,
Dindigul.